மக்கள் விஷயத்தில் அவர்கள் தேவைகள் நிலைமைகளை விளங்கி, சரீர ஆத்ம வளர்ச்சிக்கு உதவி, அன்பை வளர்த்து அதனால் அன்பின் பிணிப்புக்குள் அனைவரும் இணைந்து வாழ வழி பிறக்க வேண்டும். புதிய உலக மக்களாய் வாழ வழிகாட்டும் உத்தரவாதம் பெற்றருக்குண்டு. பிதாவின் மாதாவின் அன்பைக் கண்டு இறையன்பை மட்டிட வழி பிறக்கவேண்டும். அடக்குவதும் அலட்சியம் பண்ணுவதும் அன்றி, அன்பின தண்டனையும், புத்திமதியும் அவர்களை மகிழ்விப்பதில் ஆர்வமும் இருக்கவேண்டும். அவர்கள் தேவையை வேறு எதுவும் தடை செய்யாது பார்ப்பது அவசியம். சமூக தேவை, அயலார் உறவு, அலுவலகக் கடமைகள் மத்தியிலும் மக்கள் தேவை நிறைவாகக் கவனமாயிருக்கவேண்டும். அதற்கு வழிகாட்டியும் உதவியும், மாதிரியாய் வாழ்ந்தும் வரும் உத்தரவாதம் கிறிஸ்த குடும்பங்களுக்கு மாத்திரமன்றி ஆசிரியராய், குருவாய், நண்பராய் யாவருக்குமே யுண்டு.

அயலார் உறவில் அநுதாபமும், பரிவான வார்த்தையும் மாத்திரமன்றி அவர்கள் தேவையை நிறைவாக்குவதில் நமது கிறிஸ்த அன்பு நம்மை நெருக்கி ஏவ நம்மாலானதையெல்லாம் செய்ய முயலவேண்டும். பிரதிபலன் சுய தேவையற்ற தொண்டு கிறிஸ்தவரின் தொண்டாக வேண்டும். அயலார் விஷயத்தில் போதிய விளக்கமும், சகிப்பும், மன்னிப்பும் இருப்பதோடு புதுவாழ்வு பற்றிய செய்தியும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

சமூகதேவைகளில் கிறிஸ்தவர்கள் முக்கிய கவனமும், பங்குங் கொள்ள இவர்களின சின்னமாகிய அன்பு(கிறிஸ்துவின் அன்பு) எப்போதுமே ஏவக் காணப்பட வேண்டும். கிறிஸ்து என்ன சொல்லுகிறரோ அதன்படி செய்யும் பொறுப்புகிறிஸ்தவர்களுடையது. தேசத்தின் தேவைகள் நிலைமைகளில் கிறிஸ்து நெறியின் இயல்பு விளங்க வகை செய்யும் உத்தரவாதமுண்டு.

அலுவலகங்களிலும், தொழில் புரியும் இடங்களிலும், வேறெங்கும் நமது சரீரங்கள் தேவனுக் கேற்கும் பலிகளாகி, எந்த நேரமும், எந்த வேலையும் அவர் புகழ் கூற ஏதுவாக வேண்டும். சத்தமிடாத சான்றுகள் — ஆனல் வலிய சான்றுகள் — ஆண்டவரை மகிமைப்படுத்த வழிநடத்தவேண்டும்.

இவற்றுக்கெல்லாம் உதவியாக தொழுகையும், தொண்டும், கடவுளுக்கும் அவன் மக்களுக்கும் நாம் கொடுக்கக் கூடியதெல்லாவற்றையும் — பொருளோ, நேரமோ, தாலந்துகளோ யாவையும் — கொடுக்கும் ஆசையும் உண்டாக வேண்டும். நாம் வாங்கப்பட்டவர்கள், மீட்பின் வேலையில் பங்காளிகள் என்ற நினைவில் நம் வாழ்வு வளர வேண்டும். ஆண்டவனன்பை உருசித்து, அவர் கட்டளையை மனதிற்கொண்டு அவருடைய ஆளுகை விரைவிற் கிட்ட வழிசெய்யும் உத்தரவாதத்திலிருந்து எக்கிறிஸ்தவனும் தப்பிக்கொள்ள முயலவே கூடாது. அழைக்கப் பட்டோம் அமர்த்தப்பட்டோம், அவரை மகிழ்விப்பதில் இன்பங் காண, நித்திய இன்பத்தை அனுபவிக்க, பகிர்ந்து கொள்ள நாம் கடனாளிகளானோம். நிறைவேற்றும் உத்தரவாதம் கிறிஸ்தவர்கள் யாவரதுமாகும்.

இப்புது வாழ்வின் பிறப்பிடம் கிறிஸ்த குடும்பம்; வளரும் இடமும், வளர்க்கும் இடமும் அதுவே.

இவ்வாண்டு நமது அத்தியட்சாதீன இல்லற வாரத்தின் பொருளாக இவ்விஷயம் கவனம் பெற இருக்கிறது. நம் சிந்தையும், முயற்சியும், புதுமை உண்டாக்க வழி பிறக்க ஆவியானவரின் வல்லமையை வேண்டி நிற்போமாக.

### சிந்தையிலிருந்த

நூல் நிலையம் பெரியோரின் உயிர்கள் வாழும் புண்ணிய தலம், அங்கே எப்பொழுதும் அறிவு மணங் கமழ்ந்து கொண்டேயிருக்கும்.

○

வாசிப்பு அறிவுக்குரிய சாதனங்களை மனதுக்களிக்கும்; சிந்தனையே நாம் வாசிப்பவைகளை நம்முடையனவாக்கும்.

○

விசுவாசமே வாழ்க்கையின் வலிமை.

○

# செபத்தின் தெய்வியல் சாஸ்திரம்
## (THE THEOLOGY OF PRAYER)

( வண. டாக்டர் ஜேம்ஸ் மேதர் )

செபம் ஓர் இரகசிய தெய்வ சக்தி நிறைந்த ஔஷதம். நான் மூன்று மாசக் குழந்தையாயிருக்கையில் கடும் வியாதியாய் இருந்து குடலில் சத்திரசிகிச்சை செய்து, வைத்தியர் கைவிட்டார்கள் என்றும், தன்னுடைய செபங்களுக்கு மாறுத்தரமாய் நான் தப்பிப் பிழைத்தேன் என்றும் என்னுடைய அருமை மாதா எனக்குச் சொல்லுவார். இந்த மாசம் எனக்கு 78 வயது முடிகிறது. என்னுடைய மாதாவின் சாட்சி சிறு வயதுமுதல் இந்நாள் மட்டும் செபத்தின் வல்லமையை எனக்கு வற்புறுத்திக் கூறிக் கொண்டிருப்பதே.

நம்முடைய வேதம், செபத்தைப்பற்றிப் போதிப்பது என்ன? இது விஷயமாய்ச் சில குறிப்புகளை உங்கள் முன்பாக வைக்க விரும்புகிறேன்.

(அ) கடவுள் மனுஷனுக்கு அத்தியாவசியமான ஒருவர் என வேதம் போதிக்கின்றது. சரீரப் பிரகாரமாய், மனுஷனுக்கு ஆகாயம் அல்லது காற்று சுவாசிப்பதற்கு அவசியம். அதுபோல், சூரிய வெளிச்சம் தண்ணீர் என்பனவும் அவசியம்: ஆகாயம் இல்லாமல், 24 மணித்தியாலங்களில் 5 நிமிஷமாகிலும் மனுஷன் சீவிக்க முடியாது. ஓர் குருவி பறப்பதற்கு அதின் இரு செட்டைகளும் அத்தியாவசியம். ஒரு மீன் உயிரோடே இருப்பதற்கு, தண்ணீரில் அது சீவிப்பது அத்தியாவசியம். இதுபோலவே மனுஷனின் வாழ்வு சரியாய் இருப்பதற்குக் கடவுள் மனுஷனுக்கு அவசியம். ஆகவே, செபமும் மனுஷனுக்கு அவசியம். இந்தஉலகத்தில் ஒரு நல்ல குணமாகிலும் இல்லாத ஒரு மனுஷனும் இல்லை, ஏதோ குறை ஒன்று இல்லாத மனுஷனுமில்லை என்று மனோதத்துவ சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். பிளற்றோ (Plato) என்ற கலைஞானி, மனுஷன் ஒரு சோடிக் குதிரையை வண்டியில் பூட்டி, சவாரி செய்கிறவன் போலிருக்கிறன்; ஒரு குதிரை கீழ்ப்படிவுள்ள நல்ல குதிரை; மற்றது குழப்படியுள்ள குதிரை; குழப்படியுள்ள குதிரை, கடிவாளம் றேனிசுக்குக் கீழ்ப்படியாத குதிரை, அடக்கி நடத்தமுடியாத குதிரை. மனுஷனுக்குள் இந்த இரண்டு குதிரைகளும் உண்டு. என்று சொன்னர், கடவுளுடைய துணை மாத்திரமே, அடக்க முடியாத குதிரையை அடக்கிநடத்தச் செய்யும். ஆகவே மனுஷனுக்குச் செபம் அவசியம்.

(ஆ) கடவுள் தரும் கொடைகளைப் பெறுவதற்குச் செபம் ஒரு முறையென்று மாத்திரம் நாம் செபத்தைப்பற்றி எண்ணக்கூடாது. செபத்தின் நோக்கம், அதிலும் அதிகம்பெரியது. குடும்ப சீவியத்தில் ஒரு மனைவி தன்னுடைய கணவன் வாங்கிக் கொடுக்கும் சேலை முதலியவைகளுக்காக மாத்திரம் மனைவியாய் இருந்தால் அந்தக் குடும்ப சீவியம் அதிக கீழான பதவியிலிருக்கும். கணவனின் கொடைகளுக்கு மேலான காரியங்கள் இருவரையும் இணைக்க வேண்டும். அதுபோலவே செபமும் இருக்கிறது. மனுஷன் பூரண புருஷனைத் தேடி வளர்வதற்கும், கிறிஸ்துவின் சாயலை அடைவதற்கும் சீவியத்தின் நோக்கமாகக் கடவுள் வைத்திருக்கும் மேலானவைகளை மனுஷன் செபத்தின் மூலம் பெறுவான். அதற்கு அவன் கடவுளின் பாதத்திலிருப்பதும் கடவுளின் தரிசனம் பெறுவதும், மிகவும் அவசியம். இது விஷயமாய்ப் பின்வரும் குறிப்புகளை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்:

(1) மலைப்பிரசங்கத்தில் நம்முடைய இரட்சகர் "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்." என்றார். பரி. மத்தேயு 7 : 7 பாருங்கள். செபமாகிய ஔஷதத்தில் அடங்கியிருக்கும் மூன்று விசேஷமான மருந்துச்சரக்குகள், அல்லது வேர்களை இங்கே இரட்சகர் வெளிப்படுத்தினர். சிலர் செபமாகிய தெய்வ மருந்தில், 'கேளுங்கள்' என்ற ஒரு சரக்கு மாத்திரம் உள்ளதுபோல் எண்ணுகிறதாகப் பல தருணங்களில் கவனிக்கிறோம். எங்கள் செபங்கள் கேட்கப்படுவதற்கு நாங்கள் செய்யவேண்டிய வேலையிருக்கிறதென்று இயேசு, 'தேடுங்கள்' என்ற பதத்தினுல் குறிப்பிட்டார். காணுமற்போன வெள்ளிக்காசின் உவமையில் (பரி. லூக்காவின் சுவிசேஷம் 15 : 8 — 10) அந்த ஸ்திரி செய்தது உங்களுக்குத் தெரியும். வீட்டைக்கூட்டி, பாய்களுக்குக் கீழே, அலமாரிக்குப் பின்னே, மூலைகள், முடக்குகள் எங்கும் களைக்கக் களைக்க, வியர்க்கவியர்க்க வெள்ளிக் காசைத் தேடினுள். செபத்திலும் இப்படியே, எங்களுக்குத் தேவையானதைப் பெறுவதற்கு, நாங்கள் செய்யக்கூடிய யாவும் செய்ய வேண்டும். நான் பிரசங்கம் செய்யும் இந்த ஆலயம் (வெள்ளவத்தை, சோனகர் தெருவில்) கட்டப்பட, நீங்கள் அதிக காலம் செபித்தீர்கள். கேட்கிறதோடே நீங்கள் நின்றிருந்தால், இந்த ஆலயம் இங்கே இன்று இருக்க மாட்டாது. நாங்கள் 'தேடினேம்' வீடுவீடாய்ச் சென்று 'பிச்சை' எடுத்தோம், கடல்கடந்து மலேயா நாடு சென்று பாடுகள் பட்டோம். நான் யாழ்ப்பாணத்தில் போதகராயிருந்த காலத்தில் ஒரு குடும்பத்தை அறிவேன்; ஒரே ஒரு பிள்ளை அவர்களுக்கிருந்தது. பிள்ளைக்கு வியாதி வந்தது. பெற்றோர் பிள்ளையின் இரு பக்கங்களிலுமிருந்து ஊக்கமாய்க் 'கேட்டார்கள்'. பிள்ளை மரித்தது. அவர்கள் இரட்சகர் சொன்ன 'தேடுங்கள்' என்ற வார்த்தையைக் கவனிக்கவில்லை. அவர்கள் 'கேட்பதுடன்' பிள்ளையை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு ஓடவேண்டும். அது அவர்கள் செபத்தின் ஒரு பாகமாக எண்ணவேண்டும்.

மூன்றுவதாய், 'தட்டுங்கள்' கதவு திறக்கப்படவேண்டுமென்று இரட்சகர் கூறினர். பூட்டப்பட்ட கதவு கடவுளுடைய பக்கத்தில் என்று சிலர் பிழையாய் நினைக்கிறார்கள். கடவுளுடைய பண்டகசாலை, வங்கி, 24 மணித்தியாலங்களும் திறந்திருக்கும் கதவுகள் உள்ளவை. அவர் எப்பொழுதும் தன்னுடைய கொடைகளைக் கொடுக்க ஆவலோடே ஆயத்தமாய் இருக்கிற தகப்பன், வெளிப்படுத்தல் 3 : 20 இல் "வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்" என்ற படத்திலும், மனுஷனே கதவை பூட்டிக்கொண்டு உள்ளே வசிக்கிறன என்று காணப்படுகிறது. கெட்ட குமாரனின் உவமையிலும் கடவுள் மகன் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டும்படி விட்ட தகப்பன் அல்ல, கதவுகளைத் திறந்து வைத்து, தெருவைப் பார்த்துக் கொண்டிருந்த தகப்பனின் படமே காணப்படுகிறது. ஸ்தேவான் வானம் திறந்திருக்கக் கண்டான். பேதுருவும் அதே காட்சியை கண்டான். அப்போஸ்தலரின் நடபடிகள் 7 : 56 ; 10 : 11 பாருங்கள். இதுவே கடவுளின் நித்திய படம். கடவுளுடைய பண்டகசாலை, வங்கி 24 மணித்தியாலங்களும் திறந்திருக்கிறது. பூட்டப்பட்டிருக்கும் கதவுகள் மனுஷனுக்குள் இருக்கின்றன. உதாரணமாக, மன்னிக்காத் குணமாகிய கதவு அனேகருடைய சீவியத்துக்குள் கடவுளின் நல்ல ஈவுகள் வராது பூட்டப்பட்டிருக்கிறது. இரண்டு சகோதரிகளை அறிவேன், ஒரே பெற்றோரின் பிள்ளைகள், 20 வருஷமாய் ஒருவரோடே ஒருவர் பேசுகிறதில்லை. மாசந்தோறும் இராப் போசனத்துக்குப் போகிறார்கள். கதவு பூட்டி இருக்கையில் எப்படி இராப்போசனத்தின் 'தெய்வ மன்னு' அவர்களுடைய சீவியத்துக்குக் கடவுளுடைய ஈவுகளைக் கொண்டு வரக்கூடும்?

— வரும்

பித்தளைப் பாத்திரத்தை நாள் தோறும் துலக்காவிட்டால் அது மாசடையும். இறைவனை நாள் தோறும் கருத்திற் கொள்ளாவிடின் மனித நெஞ்சம் அழுக்கடையும்.

○

மௌனம் மிக வலிமையுள்ள கருவி. அதைக் கையாளும் வல்லமை மனிதருக்குள் மிகச் சிலருக்கே இருக்கிறது.

○

உணர்ச்சி போகிற போக்கிலே தன்னைச் செல்ல விடுபவனை விட அடிமை வேறில்லை.

○

தாம் திருந்துவனவைகளைக் காண முயலுவதல்ல, நமமுன் தெளிவாய்க் காணப்படுபவைகளைச் செய்வதே நமது பெருங்கடன்.

○

முயன்று பார்க்கும்வரை தன்னுல் முடியக்கூடியது இம்மட்டென்று ஒருவனும் அறியான்.

# ஏழுபத்திரண்டு நாடுகளில் காந்தி நூற்றுண்டு விழா

மகாத்மா காந்தி நூற்றுண்டு விழாவில் இதுவரை 72 நாடுகள் கலந்துகொண்டன.

இலங்கையில் காந்திஜியின் பெயரால் கிராமாபிவிருத்தித் திட்டம் ஒன்றும், பாரீஸில் பொது மக்களுக்கான ஒரு மைதானமும் திறுவப்படவிருக்கின்றன. துருக்கி மொழியில் மகாத்மாவின் வாழ்க்கை வரலாறு வெளிவரும். தார்-எல் ஸலாமில் ஞாபகார்த்த நிலையமொன்றும் அமைக்கப்பட விருக்கின்றது.

இலங்கை, பிரான்ஸ், டென்மார்க், தங்கனிக்கா ஆகிய நாடுகளில் காந்தி நூற்றுண்டுக் கொண்டாட்டங்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 72 நாடுகளுள் 26 ல் தேசியக் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கமிட்டிகளில் அனேகமாக அந்நாட்டு அரசாங்கத் தலைவர்களே தலைமைவகித்தார்கள். பெல்ஜியத்தில் அந்த நாட்டு மகாராணியும், சைப்பிரஸில் அதன் ஜனதிபதியும், இலங்கையில் கவணர்ஜெனரலும் தலைவர்களாகினர். பிரிட்டனில் மவுண்ட்பேட்டன் பிரபுவும். அமெரிக்காவில் உபஜனதிபதி ஸ்ரீ பேர்ட் ஹம்ப்ரியும தலைவர்களாயிருந்தனர்.

யாழ்ப்பாண மாநகர மண்டபத்தில் மறுமலர்ச்சிமன்றம் காந்தி நூற்றுண்டுவிழா கொண்டாடியது.

இந்தியனுகப் பிறந்து, இலங்கையிற் சற்று, தென்னுபிரிக்காவில் அனுபவம் பெற்று, தாய் சொல்லைத் தட்டாத விரதத்தினுய், நாட்டுப்பற்றும் மனிதர் பால் அன்புங்கொண்டு அடிமைத் தளைபறுத்து இந்தியாவுக்கு மாத்திரமன்றி உலகத்தின் ஒடுக்கப்பட்டோர் யாவருக்கும் விடுதலைக்கு வழிவகுத்த மகானது நூற்றுண்டு விழா ஒரு புதிய திருப்பத்தை உண்டு பண்ணும் என எதிர்பார்க்கலாம்; உண்டுபண்ணியே ஆகும்.

தனக்கென வாழாது, போதனையைச் சாதனையாக்கி மனித இன்பத்துக்கு வழிகாட்டி அந்த இலட்சியத்தில் தம்முயிரைக் கொடுத்து உலக மக்களிலிதயத்தில் இடம் பெற்ற காந்தி மகானின் சாதனை நம் நாட்டிலும் இடம்பெற்றால் எத்துணை நன்மையாகும்.

இலங்கைச் சிறுபான்மையர் ஒடுக்கப் படுவோருக்கு அவர் வழி பேருதவியாகும். அமெரிக்க நீகிரோவர் விடுதலைக்கு வழிகாட்டிய அதேவழி இலங்கை வாழ் ஒடுக்கப்படுவோருக்கும் உறுதுணையாகும். கத்தியின்றி இரத்தமின்றி வல்லரசை வென்ற அகிம்சா மந்திரம் இவர்களுக்கும் விடுதலை தர வல்லதே.

எல்லோரும் இன்புற்றிருக்க அவர் சாதனைகள் போற்றற்குரியன. நூற்றுண்டுவிழா உலகத்தில் விழிப்பையும் புதுமையையும் தருவதாக. சிலைபெடுக்கும் யாவர் உள்ளத்திலும் அவர் கருத்துக்கள் சிலையாக எழும்பட்டும்.

# புவிக்குள்ளே முதன்மை பெற்ருய்

"வாழ்க நீ எம்மான், இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!
அடிமைவாழ் வகன்றிந்நாட்டார் விடுதலையார்ந்து செல்வம்
குடிமையி லுயர்வு, கல்வி ஞானமும் கூடியோங்கிப்
படிமிசைத் தலைமையெதுய்ம் படிக்கொரு சூழ்ச்சிசெய்தாய்
முடிவிலாக் கீர்த்திபெற்ருய்! புவிக்குள்ளே முதன்மை
பெற்ருய்;"

— பாரதியார்

# நானே வழியும் ஒளியும் சத்தியமும் சீவனும்

(யோவான் 1 : 46)

" கிரான் ஜீவன் "

(முற்றொடர்)

ஒருவன் பொல்லாங்கு செய்வதாலும், அதன் மூலம் தண்டிக்கப்படாமலிருப்பதற்காயும் ஒளியினிடத்திற்கு வராதிருக்கிறன். ஆனல் சத்தியத்தின்படி செல்கிறவனே தன்னுடைய கிரியைகள் தேவனுக்குள் செய்யப்படுகிறதென்பதை அறிவிக்கும்படி ஒளியினிடத்துக்கு வருகிறன் (யோ. 3 : 20—21) அழுக்கும், பிணியும், அக்கிரமமும், அந்தகாரத்திலிருப்பவை. அவற்றோடு நீ ஏன் தங்கவேண்டும். அழுக்கு உனக்கு வேண்டுமா? பிணி உனக்குப் பிரியமா? அக்கிரமத்திலிருக்க உனக்கு ஆசையா? இவற்றின் முடிவு மரணமே. ஒளியானது பிரகாசிக்கிறது. ஒளியினிடம் வா. இருளை அகற்றிவிடு. ஒளியினிடம் வந்தால், சுகமும், சந்தோஷமும், சுத்தமும் கிடைக்கும். இவற்றின் முடிவு நித்தியானந்தமும், நித்திய ஜீவனுமே.

கீதிமானுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும். ஞானவான் ஒளியைப்போலச் சதா காலங்களிலும் பிரகாசிப்பான். அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்துக்குக் கடவுள் நம்மை அழைக்கிறர். ஒளியானவராகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறதென்னவெனில் நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன், என்னிடத்தில் வா; என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்.

கடவுள் ஒளியாய் இருக்கிறதுபோல நாமும் ஒளியில் நடந்தால் நாம் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனுகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். ஒளியில் நீ உட்பிரவேசிக்கவேண்டுமென எண்ணிய இயேசுகிறிஸ்து இருளில் பிரவேசித்தார். நாம் பிழைக்கும்படி அவர் மரித்தார். இப்போது அவர் நம் பாவ இருளிலிருந்து நம்மை இரட்சித்து நம் ஆத்துமாவில் ஒளிவீசச் செய்வார்.

பரிசுத்த கடவுளே, நான் இதுவரை இருளில் நடந்து வந்தேன், என்னை மன்னியும். இப்போது பாவ அந்தகாரத்திலிருந்து என்னை விடுவித்து உம்முடைய சீவ ஒளியில் எம்மை இரட்சிக்கும்படி தம்முடைய உயிரைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் கெஞ்சிக்கேட்கிறேன்.

"எதும் தெரியாதென மறைந்தவல் இருளை ஏதா? நீக்க ஒரு ஞான விளக்கேந்தி"

ஆம்! பாவ இருளில் மறைக்கப்பட்டு ஏதும் தெரியாமலிருந்த எமக்கு, அவர் இருள் நீங்கி நாம் ஒளியில் வரவேண்டுமென எண்ணிய தேவன் இயேசுவாகிய ஓர் ஒளிமிகுந்த ஞான விளக்கை இவ்வுலகுக்கீந்தார்.

### (3) சத்தியம்

தேவன் எங்கள்மேல் வைத்த அன்பின் அளவே இயேசுகிறிஸ்து இவ்வுலகுக்கு வந்த காரணம் என்றால் அது பிழையாகாது. நான் சத்தியமாய் இருக்கிறேனென இயேசுகிறிஸ்து கூறுகிறர். (யோ. 14 : 6) சத்தியமாவது என்ன? இக்கேள்வி ரோம அதிகாரியான பிலாத்தால் இயேசுவிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க வந்தேன். இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன். சத்தியவான் எவனும் என் சத்தத்தைக் கேட்கிறன ", என்றர். (யோ. 18 : 37) கடவுள் சத்தியசொரூபி. அந்தக் கடவுளை மனிதருக்கு வெளிப்படுத்த வந்தவரே இயேசு கிறிஸ்து. அவர் கொடுக்கும் சாட்சி சத்தியமானது. ஏனெனில், அவரே கடவுள். அதனுல் அவருக்குத் தேவனை மனிதனுக்கு வெளிப்படுத்தக் கூடிய சக்தி இருக்கிறது.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

4TH OCTOBER, 1968.

## MAHATMA GANDHI'S CENTENARY

No man has stirred the world and made his impact on it during the last several centuries like Mahatma Gandhi. Rabindranath Tagore who disagreed with him in several matters on several occasions said: "He is not only the greatest man in India, he is the greatest man on earth today". Kirby Page, who toured India some years ago to see, as an American, the Mahatma and his influence in India, in the course of an eloquent appraisal of him said: 'No Cromwell, no Mazzini, no Washington ever desired freedom more passionately than does this saint in politics .... His serenity approaches that of Buddha: his faith is as unfaltering as that of St. Paul; his courage equals that of Garibaldi; his love reminds one of St. Francis", And two days back in a message on the 99th birthday of the Mahatma, the Prime Minister of India, Mrs. Indira Gandhi, added: "The world rightly regards Gandhi as the greatest Indian since the Buddha". Therefore, it is very fitting that it has been decided to have a year's celebrations for the centenary of his birth, which falls on the 2nd of October next year. The celebrations have been already inaugurated not only in India, but in many other parts of the world too. In Ceylon it was inaugurated with a public meeting in Colombo last Wednesday.

A proper celebration of this important centenary can never be adequate with the holding of public meetings at which very eloquent and laudatory tributes are paid to this unique personality, nor with the erection of memorials nor with the establishment of scholarships and charities in his name. These would amount only to paying lip-service to his greatness and his unquenchable spirit of true service. What is required is a dedication by the individuals, communities, and nations to his noble ideals and a resolute determination and courage to translate them into action. The chief among his ideals which have stirred and influenced the world are: his assertion of the human spirit for freedom, his insistence on the worth of human dignity and equality; his advocacy of the use of non-violence for not merely securing political independence but also for resisting all evil; and his stress on the necessity for internal purity of character and spirit for individuals and groups. These did not remain mere ideals with him. He used them always in his struggle for the emancipation of Indians in South Africa, in his campaign for the freedom of his country from foreign shackles, in his fight against poverty, for raising the living and educational standards of the oppressed communities, and for elevating the spiritual lives of his compatriots.

---

J. D., C. S. I.

CHRISTIAN HOME SUNDAY

13th October, 1968.

*Speakers:*

Araly — Mrs. J. J. Ratnarajah
Vaddukoddai — Miss R. Appadurai
Navaly — Miss R. Thomas
Manipay — Mrs. L. N. Hitchcock
Uduvil — Mrs. K. J. Mills
Pandateruppu — Mrs. T. R. Stephen
Karainagar — Mrs. K. S. Jeyasingam
Tellippalai — Mrs. K. S. Saravanamuthu
Alaveddy — Mrs. N. Subramaniam
Erlalai North — Mrs. Arudpiragasam
Erlalai South — Mrs. Wignarajah
Atchuvely — Miss G. Chellappah
Udupiddy — Mrs. C. G. Canagasundram
Nunavil — Mrs. J. K[illegible]
Moolai — Mrs. E. D. Rajaratnam
Chavakachcheri — Mrs. J. Kirubainayagam
Chankanai — Mrs. D. P. T. Chelvarajah
Kudathanai — Mrs. William Thevathasan
Varany —
Usan — Mrs. S. P. Jeyasingam
Pungudutivu — Mrs. N. Sugunananthan
Delft — Mrs. Sam Thampoe
Colombo — Ambalavanar

## "THE BREAKDOWN AND RECOVERY OF FAMILY LIFE"

(Sermon preached by Archdeacon Ven. James Amarasekera at the Festival of the J. D. C., C. S. I.)

The family is the oldest of human institutions—old, strong and central to human society. We read in Gen. 5 v. 1—2, "In the day that God created man ... ... male and female created he them and blessed them and called them Adam and Eve." Mankind is made up of male and female.

It was God's purpose that mankind should live together in families. The Bible makes this clear to us — "family" is writ large across its pages. In the nomadic existence of the Hebrews, the family moved from place to place in search of fresh pasture for its cattle and sheep. Later the family was called to adjust itself to a settled life. When the children of Israel crossed over Jordan, they were to settle in the land of Canaan by families. Numbers 33 v. 54: "Ye shall inherit the land by lot according to your families ... ... according to the tribes of your fathers ye shall inherit it." Each family was known after its ancestor, its patriarch.

Jer. 31 v 1: 'At that time, saith the Lord, will I be the God of all the families of Israel and they shall be my people." The New Testament is set against the background of this family pattern into which our Lord came—born of the house and family of David; the Holy Family was registered in Bethlehem of Judaea. His first miracle in Cana concerned the needs of a family, and he took thought on the cross to provide a home for his mother.

The patriarchal family pattern so evident in the Bible extended throughout the world. In a predominantly rural agricultural setting everywhere people lived in groups or clans, where several generations lived together in joint families and shared in the common tasks. They were bound together by ties of kinship, common ownership and property, co-operative labour and by the influence of traditional customs and conventions of an authoritarian discipline. The inter-dependence between the individual and his clan sustained the stability of the joint family relationship. They were closed communities living under the same roof or in the same compound, conditioned for generations by traditions and conventions of the group. The younger families were economically dependent upon, and governed by, the Patriarch. In such an authoritarian system, they were content with limited independence. Their marriage itself had an entirely external significance, to produce children, hand over property, continue the name and so serve the interest of the joint family and clan. The quality of their interpersonal relationship was not all that important.

The Industrial Revolution led to the break-up of this joint family system. The growth of industry offered new and diversified occupational opportunities and caused the movement of people, especially young people, away from their clans across the length and breadth of the country in search of employment. Improved transport enabled travel further apart and as they settled closer to their work places, they gained a new freedom from the pull of traditions and conventions of their group. Improved communications—radio, television, newspapers, periodicals, cinemas — exposed them to new values, ideas and ideologies. They became conscious of a new sense of self-sufficiency as individuals now working on their own behalf. They felt less dependent than on God unlike in the agrarian community where they might toil, sweat and earn but had to rely on the sun and the rain in their seasons and wait upon God for the increase. So different from 1 Cor. 3: 7 "Neither is he that planteth anything, neither he that watereth but God that giveth the increase." The pay packet becomes the means and sometimes even the goal of life. Work was largely uncreative but the boredom of work could be relieved in places of commercial entertainment. Conditions could be equally so for the woman as for the man.

The social, economic and political emancipation of woman resulted in equality of opportunity and status and women were similarly exposed to the impact of change as men. In this new situation they were possessed of bewildering freedoms. It is in such an environment that the traditional patriarchal family-pattern gave way to the so-called democratic family, involving society in a profound cultural transition which has resulted in a serious breakdown of family stability. It is of vital importance that we recover the stability of family life. The family is the basic unit of Church and Society and the strength of the Church and Nation depends upon the strength of family life? The West has found it impossible to restrain the process of changes resulting, as we have seen, from its vast increase of industrialisation and urbanisation, the social, economic and political emancipation of women and the pervasive influence on living patterns of science and technology, changes not in themselves to be deplored.

Every country in Asia, including our own, is seeking economic development and with it the changes which have taken place in the West are sweeping across our country as well.

How are we to recover in such a situation the stability of family life? It would be easy enough to say; read the Bible regularly and say your prayers or even that the family which prays together stays together. Of course, we must read our Bibles and say our prayers—but we must do so intelligently and do more: educate ourselves and our people for family living at all levels of personality—physical, mental and spirtual—and equip them to use their new freedoms aright. Let us first recall that it is God's purpose for mankind that we should live together in families, "It is not good, said He for man to live alone," The first lesson then a husband and wife have to learn is that, though they may be socially and economically independent in society, yet in marriage and within the family they are interdependent — "for this cause shall a man leave his father and mother and cleave unto his wife and they twain shall be one flesh." Paradoxically, it is in this inter-dependence that they find the fulfilment of their personal relations.

Secondly, the marriage relationship is the most fundamental of all human relations and all other relations spring from it. So their second lesson is that they belong to each other in a way they can never belong to any other in an one flesh indissoluble union which makes for fidelity. "Those whom God hath joined together let no man put asunder."

Thirdly, they are the free agents who contracted their marriage before God and man and they took their first steps together in the house of God with as man and wife to God's holy altar the symbol of sacrifice. So they must learn to adjust themselves to each other in mature fulfilment of their marriage.

The marriage service reflects the Christian teaching on marriage and family. They have begun their marriage, they must grow in love from lovers to mature partners to become responsible parents. It is in order that they may grow in their marriage and family life that they need to be prepared for marriage and educated for family living.

That is the point at the physical and intellectual levels, not alone at the spritual level that the Church has yet to make an effort to recover the stability of family life. We need to work carefully a whole programme of education, medical consultation, and pre-marital counselling, as well as marriage guidance and counselling as occasions arise after marriage, if we are to help our families in this cultural transition into which we are moving. Nor can we overlook the need for the education of parents in child care and nurture and the problems of the adolescent.

It is up to you to work out in your parish a sound programme of Family Life Education. This should consist of comprehensive [illegible] panel discussion, film strips, and special [illegible]

## OBSTACLES AND OPPORTUNITIES IN CHURCH AND HOME LIFE

**In Relation to our Christian Discipleship Today**

Intended as a Basis for discussion with Questions for consideration

*The Revd. Celestine Fernando*

*( Continued from last issue )*

### 5. The Image of the Home — a new "ecclesia"?

For every Christian there is a primary obligation to answer God's call to live as a Christian in his home — for the home is the laboratory of life, and the Christian home is the laboratory of the Christian life. It is the place of primary discipleship, where we learn first of the Presence and Power of God in terms of Quiet Prayer and daily obedience, joy and sorrow, riches and poverty, health and sickness; disappointment and victory, death and life. It is the place in which we learn the first lessons of politics and economics, and, above all, of personal and social ethics as we adjust ourselves to the fellowship of our parents, brothers and sisters, friends and neighbours and all who serve us on life's way. What kind of life do we lead in our homes? Are they truly Christian? Are they homes or mere boarding houses or dormitories? What do we learn in them? How do we act in them? Are we defeated or victorious there? What are the problems that defeat us? What are the ways that assure us victory? If we are not united, clean and free in our own homes, how can we bring unity, cleanliness and freedom to our nation?

### 6. We have many adversaries — within the Church

As we consider our Church life, there is no doubt that we have "many adversaries". Chief among them are not so much among those who are outside the Christian Churches but within them. There are those who are ignorant of the Scriptures and of the Gospel message that they profess but who do not care to remove their ignorance, and those who are content to be superficial members of the Church with no regard to the norms and responsibilities of membership.

There are those who are content to give money to the Church, withholding themselves, their services and their lives and those who serve on Boards and Committees with no regard to Christ's presence or the norms of New Testament teaching concerning talents, time and money, brotherhood or forgiveness. There are those who being young and having abundant life before them are content only with the gilt and the tinsel, the excitement and the momentary pleasure, which are the marks of the Hollow Men of our time and who are quite happy to waste God's gifts until they destroy themselves. There are those who use the Church for their advantage and are content to criticise from the ringside without any effort to help those who are battling with difficulties and problems, those who do not have time or make time to pray to seek God's will, to share God's message with others. These (not those who do not call themselves but being Christian do nothing for Christ) are the Church's worst adversaries.

### 7. There is "a great door and effectual"

But there is also "a great door and effectual open to us" today. Our country and people have generally shown a great sense of tolerance — despite the violence that has erupted in Council Chambers as on rioting roads. The average townsmen and most villagers have not been influenced so much by the extremists either in politics and religion. Contacts with international agencies and people of other lands, the travel of Ceylonese missionaries to other lands, the gradual popularisation of humane ideas of life and the revival that is evident in the study, if not the practice, of all religions which has begun in many places: these are examples of 'doors' that have been opened revealing listening hearts and minds in quite unexpected places. Religious leaders of all religions have shown a growing desire not to think of religion in the way that so many politicians have tended to do, as a means of power, but to work together with other religious leaders for the nation's good. And so, there are many opportunities today for all who have any "Good News" to preach to modern men. For too many "modern men" in Ceylon, as elsewhere, are in need of Good News: they are lonely and confused, unloved and frustrated and they need to be victorious over life's difficulties and dangers which are either of their own making or of others.

*( To be continued )*

---

in the parish—youth, young married couples, older married couples, parents, old parents, grandparents, young women, young men, married women, and married men, as well as groups according to their occupation or profession. There should also be a good lending library for the use of everybody in the parish.

This is an immense task and we need the help of doctors, lawyers, nurses, teachers, social workers, youth leaders — those especially who have to do with others in the course of their normal work and have special personal relations with them which provide opportunities of counselling at the individual level. The Church must arrange to train and equip them to engage in the Church's mission in this special field of service. They will provide the trained personnel for work with the parish. Groups as well can be of service in the course of their daily work, in their several spheres: that would be the Church's point of out reach to the community at large.

Yes, it is an immense task and it comes back to you and to me. Do people come to you with their troubles? Do they come and talk over their troubles with you in the office or at home? If they do, then you are the sort of person who ought to be trained for this service. The Christian Study Centre at 490 Havelock Road offers you special library facilities and we have courses organised there from time to time for training Counsellors. You can help train yourself by making use of these facilities — they exist for people like you. Yes, we need the help of so many. It is a call to the Church to be what it was ever intended to be — the Family of Families, the Family of [illegible] of God, the Kingdom of Heaven.

*Devotional*

*The fear of the Lord leads to life and he that has it shall rest satisfied* ... ... ... ... Prov. 19 : 23.

One of the ailments of the modern world is the inability of many people to find a meaning in life. Many throw away old standards without taking on any standards in their place. There are revolts in many spheres, the people taking part in them having no idea of what they want. Because many find no meaning in life there is much aimlessness.

Why is it that many find no meaning in life? Is it because there is no meaning? To find meaning in anything requires a certain qualification. A little child looking on all that goes on around it finds no meaning in it. A school-boy seeing a sheet covered with mathematical formulas may find no meaning in the whole thing; and it is not because there is no meaning in what is seen.

During the II World War, the Germans had been uniformly victorious in North Africa and had come to the gates of Alexandria. When Montgomery had taken command and had beaten back the first wave of attack at El Amein, he called a Press Conference and said, "Gentlemen, this is victory, absolute and unqualified". Many were surprised at the meaning he put into the battle; but it proved to be the beginning of a campaign of unmitigated success. He had seen the meaning of the battle, others had not.

Those who see the meaning of particular actions and things require the qualification for doing so; the ability to see the meaning of life also requires a qualification. The author of the "Proverbs" says that that qualification is the "fear of the Lord". It is he who is convinced that there is a God who has created the world and rules over it, who can see the meaning of life. To look on life and the world without this conviction and seek for a meaning there is to seek in vain.

*S. K.*

FLOWERS

FOR

ALL OCCASIONS

*Phone or write:*

Lane & Company

P. O. Box 19

NUWARA ELIYA.

*Grams:* "LANES" — *Phone:* 376

IN MEMORIAM

IN LOVING MEMORY

of

Dr. EDWARD THAMBIAH Mac Intyre

*Born:* *6th October, 1868.*

*Died:* *12th July, 1938.*

Lovingly and reverently remembered on his birth centenary by his loved ones in Ceylon and Malaysia.

38

IN MEMORIAM

IN EVER-LOVING MEMORY

of

ROSE SOUNDRAMMA JOSHUA

*Born:* *21 - 1 - 1900* (Chankanai)

*Departed:* *7 - 10 - 1966* (Johore Bahru, Malaysia.)

"I will bless the Lord at all times: His praise shall continually be in my mouth", (*Psalm. 34 : 1*)

Remembered in gratitude by her husband, children and grand-children.

Johore Bahru,
Malaysia.

38

1968 Subscriptions of Rs. 15 due now

Manager

Printed and published for the American Ceylon Mission by Mr. Abraham Saravanamuthu Thambiratnam, residing at Manipay, at the American Ceylon Mission Press, Uduvil Road, Manipay, on Friday, 4th October 1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org